# விலைமனு கோரல் (IFB)

## பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு - இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்

## இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு தேசிய இலத்திரனியல் கடவுச்சீட்டுக்கான (e-Passport) Public Key Infrastructure (PKI) தீர்வு (ICAO-PKD ஒருங்கிணைப்புடன்) மற்றும் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளுக்கான தனிப்பயனாக்கச் சேவைகளை கொள்முதல் செய்வதற்காக விலைமனு கோரல்

## IFB No: DIE/PRO/PKI/2026

1. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் சார்பில் மேல்நிலை கொள்முதல் குழுத் தலைவரினால் (HLPC) இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் **சார்பில்** இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு தேசிய இலத்திரனியல் கடவுச்சீட்டுக்கான (e-Passport) Public Key Infrastructure (PKI) தீர்வு (ICAO-PKD ஒருங்கிணைப்புடன்) மற்றும் இலத்திரனியல் கடவுச்சீட்டுகளுக்கான தனிப்பயனாக்கச் சேவைகளை கொள்முதல் செய்வதற்காக தகைமையுள்ள வழங்குனர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

2. 2024 ஆம் ஆண்டின் தேசிய கொள்முதல் வழிகாட்டு நெறிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள **சர்வதேச போட்டி அடிப்படையில் (ICB – (தனிக் கட்ட இரண்டு கடித உறை அமைப்பு)** விலைமனுக் கோரல் நடத்தப்படும். மேலும் வழிகாட்டு நெறிகளில் விபரிக்கப்பட்டுள்ளபடி தகைமைகளைக் கொண்டுள்ள அனைத்து விலைமனுதாரர்களுக்கும் விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

3. தகைமையுள்ள விலைமனுதாரர்களுக்கான தகைமை அளவுகோல்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கி இருக்கும். (மேலதிக தகைமைத் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன):

**அ) பொதுவான அனுபவம்;**

விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதிக்கு முன்னதாக, இலத்திரனியல் கடவுச்சீட்டு (e-Passport) தனிப்பயனாக்கத் தீர்வுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் தொழில்நுட்ப ரீதியாக இயக்குதல் ஆகியவற்றில் ICAO-PKD ஒருங்கிணைப்புடன் கூடிய தேசிய இலத்திரனியல் கடவுச்சீட்டு PKI தீர்வை வடிவமைத்தல், விநியோகித்தல், நடைமுறைப்படுத்தல், பரிசோதித்தல், செயற்படுத்தல், ஆரம்பித்தல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றிலும் விலைமனுதாரர் குறைந்தது பத்து (10) ஆண்டுகள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**ஆ) ஒத்த இயல்புடைய ஒப்பந்தத்தில் பெற்றுள்ள விசேட அனுபவம்:**

(i) விலைமனு சமர்ப்பிக்கும் இறுதித் திகதிக்கு முன்னைய கடந்த ஏழு (07) ஆண்டுகளுக்குள், விலைமனுதாரர் இலத்திரனியல் கடவுச்சீட்டு (e-Passport) தனிப்பயனாக்க வசதியை வெற்றிகரமாக நிறைவு செய்திருத்தல் வேண்டும் அல்லது தற்போது அதை இயக்கி வருபவராக இருத்தல் வேண்டும். இவ்விரு நிலைகளிலும், ஒரு முதன்மை ஒப்பந்ததாரராக ஒரே ஒப்பந்தத்தின் கீழ் குறைந்தபட்சம் முப்பது இலட்சம் (3,000,000) இலத்திரனியல் கடவுச்சீட்டுகளைத் தனிப்பயனாக்கம் செய்து நிறைவுசெய்திருத்தல் வேண்டும். இந்த ஒப்பந்தத்தின் எல்லை (Scope) என்பது வன்பொருள் சாதனங்களை விநியோகித்தல் மற்றும் பராமரித்தல், மென்பொருள் கூறுகளை வடிவமைத்தல், விநியோகித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், தொழில்நுட்ப இயக்கங்கள் மற்றும் பராமரிப்பு உட்பட தனிப்பயனாக்க செயன்முறையின் ஆரம்பம் முதல் முடிவு வரையிலான (end-to-end) பொறுப்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ii) விலைமனு சமர்ப்பிக்கும் இறுதித் திகதிக்கு முன்னைய பத்து (10) ஆண்டுகளுக்குள், விலைமனுதாரர் ஒரு முதன்மை ஒப்பந்ததாரராக ICAO-PKD ஒருங்கிணைப்புடன் கூடிய குறைந்தபட்சம் ஒரு (01) தேசிய இலத்திரனியல் கடவுச்சீட்டு (e-Passport) PKI தீர்வை

வெற்றிகரமாக வழங்கி, பராமரித்திருத்தல் வேண்டும். குறிப்பிடப்படும் அந்த அமைப்பு/செயல்பாட்டுத் திட்டம் தற்போது இயக்கத்தில் (In operation) இருத்தல் வேண்டும்.

இ) **தரம் மற்றும் உத்தரவாத தேவைப்பாடுள்:**

விலைமனுதாரர் ISO 9001:2015 மற்றும் ISO 27001 தரச் சான்றிதழ்கள் மூலம் உத்தரவாதப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

ஈ) **சராசரி வருடாந்த வருமனாப் புரள்வு :**

விலைமனுதாரரின் குறைந்தபட்ச சராசரி வருடாந்த வருமானம் **USD 10** மில்லியனாக **(10,000,000 USD)** அல்லது அதற்குச் சமமாக இருத்தல் வேண்டும். அது கடந்த 3 வருடங்களில் 2023 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2026 மார்ச் 31 ஆம் திகதிக்கு இடையில் கணக்காய்வுசெய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மூலம் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

உ) **நிதி மூலங்கள்:** இந்தக் கருத்திட்டத்திற்காக விலைமனுதாரரின் கடப்பாடுகள் அற்ற USD 1.8 மில்லியனை **(1,800,000 USD)** விடக் குறையாத பணப்புழக்கத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான திரவச் சொத்துக்கள், கடன் வசதிகள் மற்றும் பிற நிதி வழிகள் போன்ற நிதி ஆதாரங்களுக்கான பிரவேசம் அல்லது கிடைப்புத்தன்மை விலைமனுதாரர் மூலம் காண்பிக்கப்படல் வேண்டும்.

3. இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு இது தொடர்பான மேலதிக விபரங்களை, இலங்கை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுஹுறுபாயா”, **05** ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதிக் கட்டுப்பாட்டாளரிடம் (கொள்முதல்) 2026 செப்டம்பர் 18 ஆம் திகதியிலிருந்து வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ள முடியும் அல்லது தொலைபேசி இலக்கம் :+9412101559 மற்றும் மின்னஞ்சல் dcprocu@immigration.gov.lk மூலம் தொடர்புகொள்ள முடியும். விலைமனு ஆவணங்கள் பரீட்சிப்புத் தேவைக்காக மாத்திரம் பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சின் (www.pubsec.gov.lk) இணையத்தளத்திலும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் (www.immigration.gov.lk) இணையத்தளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

4. இங்கு மேலே பந்தி 3 இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தில் மீளளிக்கப்படாத இலங்கை ரூபா 250,000.00 அல்லது இலங்கையில் சுதந்திரமாக மாற்றக்கூடிய நாணயத்திற்குச் சமமான தொகையை கட்டணமாகச் செலுத்தி எழுத்துமூல கோரிக்கையொன்றை தனது வியாபார கடிதத் தலைப்பில் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை பெற்றுக் கொள்ள முடியும். கட்டணம் காசாக செலுத்தப்படுதல் வேண்டும்.

5. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2026 நவம்பர் 02 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியவாறு மேலே 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அழைக்கப்பட்டு முடிந்தவுடன் 2026 நவம்பர் 02 ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு சமூகமளிப்பதற்கு விருப்பத்தைத் தெரிவித்திருந்த விலைமனுதாரர்களினது பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் இலங்கை ரூபாய் முப்பத்தைந்து மில்லியன் (LKR 35 மில்லியன்) அல்லது அதற்கு சமமான தொகை இலங்கையில் இலகுவாக மாற்றக்கூடிய நாணயத்தில் வங்கி உத்தரவாதத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

6. விலைமனு முன் சந்திப்பொன்று 2026 ஒக்டோபர் 02 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு இலங்கை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, “சுஹுறுபாயா”, **07** ஆம் மாடியில் அமைந்துள்ள குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள அனைத்து விலைமனுதாரர்களும் விலைமனு முன் சந்திப்புக் கூட்டத்தில் பங்குபற்ற முடியும்.

**தலைவர்**
**மேல்நிலை கொள்முதல் குழு (HLPC)**
**குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்**
**05 ஆம் மாடி,**
**“சுஹுறுபாயா”,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி,**
**பத்தரமுல்லை,**
**இலங்கை.**
**2026 செப்டம்பர் 18 ஆம் திகதி.**